**ஒதுக்கீட்டுத் தலைப்பு 119 - மின்வலு, எரி சக்தி அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மின்வலு, எரி சக்தி அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 யூன் 26 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மின்வலு, எரி சக்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு

அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணியிருக்காமை**

(i) கடன்கள் பதிவேடு, தனிப்பட்ட கோவைகள் போன்ற தேவையான சான்றுகள் அமைச்சில் காணப்படாமையால் ரூபா 209,047 கூட்டுத்தொகையான கடன் மீதிகளை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ii) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த ஏற்பாடும் செலவினமும்**

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 34,290,340,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 32,665,105,333 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்புக்கள் ரூபா 1,625,234,667 ஆக காணப்பட்டதுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 4.74 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டு வருபவை | 1,083,340,000 | 1,074,240,000 | 615,678,645 | 57.31 |
| மூலதனம் | 32,500,000,000 | 33,216,100,000 | 1,009,556,022 | 2.94 |
| மொத்தம் | 33,583,340,000 | 34,290,340,000 | 1,625,234,667 | 4.74 |

**(ii) பாதீட்டு முரண்**

09 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 529,849,700 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. 13 செலவின விடயங்களிற்காக மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 45 சதவீதத்திற்கும் 94 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

11901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 5,000,000 | 2,191,116 | 2,600,000 | 3,310,776 | 20,000,000 | 10,605,220 |

11901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 225,442 கூட்டுமொத்தமாக இருந்தது.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கில் ரூபா 16,130,664 தொகையான வரவு மீதி காணப்பட்டது.

### (உ) பொது வைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,610,783 ஆனதுடன் அதில் உள்ளடங்கியிருந்த 2 ஆண்டுகளைத் தாண்டிய ரூபா 197,523 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2012 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் செயலாற்றல் அறிக்கை 147 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2013 ஒக்தோபர் 23 ஆந் திகதியே பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வெளித் தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

ரூபா 7,000,000 கூட்டுத்தொகையான கிரயம் கொண்ட 04 வாகனங்கள் அரசாங்க சபை ஒன்றுக்கு விடுவிக்கப்பட்டிருந்தன.

### (ஆ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்

அரசாங்க சபையொன்றுக்குச் சொந்தமான 02 வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | |
| (அ) நிதிப்பிரமாணம் 103(1) | 517,107 | 4 வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யாது அமைச்சிற்கு ஏற்பட்டிருந்த நட்டமாக புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) நிதிப்பிரமாணங்கள் 104(3) மற்றும் (4) | 602,956 | நட்டமொன்று அல்லது இழப்பொன்று ஏற்பட்டவுடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு ஆரம்ப அறிக்கையும் பூரண அறிக்கையும் மூன்று மாதங்களிற்குள் சமர்ப்பிக்கப்படாது விசாரணை நடவடிக்கைகள் 2 முதல் 6 வருட கால வீச்சில் மேற்கொள்ளப்பட்டு நட்டங்கள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப் பட்டிருந்தன. |

## 1.7 மனிதவள முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | உள்ளபடி யான எண்ணிக்கை | வெற்றிடங்க ளின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) சிரேஷ்ட நிலை | 17 | 13 | 04 | - |
| (ii) மூன்றாம் நிலை | 04 | 01 | 03 | - |
| (iii) இரண்டாம் நிலை | 64 | 43 | 21 | - |
| (iv) ஆரம்ப நிலை | 46 | 35 | 11 | - |
| (v) ஏனையோர் | 01 | 20 | - | 19 |
| மொத்தம் | 132 | 112 | 39 | 19 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணப்பட்ட 39 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்ததுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மிகையான பதவியணியினரின் எண்ணிக்கை 19 ஆகும்.

**(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள்**

அமைச்சினால் முறையற்ற விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள் தொடர்பாகக் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முறையான அங்கீகாரம் இன்றி அமைச்சின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த மகாவலி அதிகாரசபைக்குரிய சாரதிகளின் சம்பளங்களாக மீளாய்வாண்டில் ரூபா 718,835 தொகையும், 2010 மே முதல் 2011 திசெம்பர் வரை ரூபா 738,195 தொகையும் அமைச்சின் கட்டளையின் பிரகாரம் அரசாங்க சபையொன்றினால் அந்த அதிகாரசபைக்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

(ii) முறையான அங்கீகாரமின்றி சபையொன்றின் 24 உத்தியோகத்தர்கள் அமைச்சின் சேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதற்காக சபையினால் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 20,074,851 சம்பளங்கள் மற்றும் படிகளாகவும் ரூபா 1,488,106 ஊக்குவிப்புப் படியாகவும் செலுத்தப்பட்டிருந்தது.